[1982 பிப்ரவரி 19

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று நாட்களாகவே நாங்கள் இதையெல்லாம் சொல்லவேண்டுமென்றாலும் அதற்கு விதியில் இடமில்லை என்று அப்படியே போய்க் கொண்டிருக்கிறது. நேற்றைய தினம் இங்கே எழுப்பப்பட்டிருக்கிறது, நான் மாலையிலே வர முடியல்லை. நேற்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் செல்கிற சாலையில் வெடிகுண்டு வைத்திருக்கிறார்கள். ஒன்று வெடித்து......

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு-குழப்பம்) நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை கேட்டுவிட்டு, நான் பேசலாமா வேண்டாமா என்று சொன்னால் நன்றாக இருக்கும். எழுந்தவுடனே பேசக் கூடாது என்றால்?

திரு துரைமுருகன் : நாவலர் அவர்கள் பேசக் கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : அதுதான் சொன்னீர்களே விதியைத் தளர்த்தி, இந்தப் பிரச்சினை குறித்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை, இன்றைக்கு எடுத்துக் கொள்ளலாம். இருக்கின்ற பிரச்னையை நான் விளக்கிச் சொல்கிறேன், அப்பொழுது இருக்கின்ற நிலைமைகளைத் தெரிந்து கொள்ளலாம். அதற்குள் ஏன் அவசரப்பட வேண்டுமென்றுதான் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

3. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 58ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஒரு நாள் கூட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பிரச்னைகளை எடுத்தக் கொள்ளக் கூடாது என்றுள்ள விதி 58-தளர்த்தப்பட்டு இன்று (19-2-82) இரண்டுப் பொருள்கள் எடுத்துக் கொள்ளப் பெறலாம்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

4. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) வாடிப்பட்டி ராவலர்கள் ஊராட்சிப்பள்ளியில் பணிபுரியும் சீனியம்மாளைத் துன்புறுத்தியது

மாண்புமிகு பேரவைத் தலைவர். மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் உதவி ஆசிரியையாகப் பணியாற்றும் திருமதி எம். சீனியம்மாள் என்பவரை 1-2-82 அன்று காலை பள்ளியில் வேலை செய்து கொண்டிருந்தபோது போலீசார் அவரை பலவந்தமாக